## கணினியை இனங்காண்போம் : அலகு 2

### ❖ கணனி சிறப்பியல்புகள்



- கதி
- செம்மை
- திறன்
- பல்திறமை
- தேக்குதல், மீட்டல்

### ❖ கணனி பாகுபாடு

1. **அளவிற்கேற்ப**
   - மீக்கணனிகள் - நாசா, இராணுவ
   - பெருமுகக்கணனிகள் : பெரிய வர்த்தக
   - சிறுகணனிகள் : வங்கி
   - தனியாள்/நுண் : தனிநபர்




2. **தொழில்நுட்பத்திற்கேற்ப**
   - ஒத்திசைக்கணனிகள்
   - இலக்கமுறைக்கணினிகள்
   - கலப்பினக்கணனிகள்

### ❖ துறைகள் (Ports)




1. **PS/2** : சுட்டி,விசைப்பலகை
2. **சமாந்தரதுறை** : அச்சுப்பொறி
3. **HDMI :** TV, கணனிதிரை
4. **RJ45** : PC,Router- switch,modem
5. **செவிப்புல** :நுணுக்குபன்னி,ஒலிபெருக்கி
6. **USB** : Printer, வருடி,mouse
7. **VGA**:கணனிதிரை,பல்லூடகஎறிவை
8. **தொடர்நிலை** : modem
9. **DVI** : கணனிதிரை




### ❖ உள்ளீட்டு சாதனங்கள் (Input Devices)

1. சாவிப்பலகை (Key Board)
2. சுட்டும் சாதனங்கள்
   - சுட்டி(Mouse)
   - தொடுநிரப்பிடம் (Touch Pad in Laptop)
   - தொடுதிரை (Touch Screen)
   - இயக்குபிடி (Joy Stick)
   - ஒளிப்பேனா (Light Pen)







3. விம்பமாக்கு ஒளியுரு சாதனங்கள்
   - இலக்கமுறைக்கமரா (Digital Camera)
   - வலைக்கமரா (Web Camera)
   - மூடிய சுற்று தொலைக்காட்சி (CCTV)
4. வருடிகள்
   - சமதளப்படுக்கை வருடி (Scanner)
   - பட்டைக்குறிமுறை வாசிப்பான் (BarCode Reader)
   - காந்தமையுரு வாசிப்பான் (MICR)
   - ஒளியியல் வரியுரு (OCR)
   - ஒளியியல் குறி (OMR)
   - தன்னியக்க காசளிப்பு பொறி(ATM)
   - நுணுக்குப்பன்னி (MIC)

### ❖ வெளியீட்டு சாதனங்கள் (Output Devices)

**i. மென்நகல் (Soft Copy)**

- திரை (monitor/Screen)
  a. கதோட்டுகதிர்குழாய் (CRT)
  b. திரவப்பளிங்குகாட்சி (LCD)
  c. ஒளிகாலும் இருவாயி (LED)
- பல்லூடக எறிவை (Multimedia Projector)




**ii. வன்நகல் (Hard Copy)**

- அச்சுப்பொறி
  1. அழுத்தச்சுப்பொறி
  2. அழுத்தா அச்சுப்பொறி



1. **அழுத்தச்சுப்பொறி**
   - புள்ளி அமைவுரு : மை நாடா
   - வரி அச்சுப்பொறி :
2. **அழுத்தா அச்சுப்பொறி**
   - லேசர் அச்சுப்பொறி : உலர் மைப்பொடி(Toner)
   - குமிழி/மைத்தாரை : திரவ மை (Liquid Ink)
   - வெப்ப அச்சுப்பொறி : (Thermal)➔ATM,Bus ticket
   - வரைபி (Plotter) ➔கட்டட திட்டமிடல் படங்கள்

**iii. ஒலி (Sound)**

- ஒலிபெருக்கி

### ❖ கணினி தொகுதியின் அமைப்பு வரைபடம்






### ❖ மையமுறைவழியாக்க அலகு (CPU)

- கணினியின் மூளை. 3 பகுதிகள்
  1. எண்கணித தருக்க அலகு – ALU
  2. கட்டுப்பாட்டு அலகு – CU
  3. நினைவகப்பதிவகம் - Memory Registers
- கணினியின் கதி

  கடிகாரக்கதி(Clock Speed) : Hz, MHz, GHz

### ❖ கணினி நினைவகங்கள் (Memories)

**i. முதல் நினைவகங்கள்**

1. தற்போக்கு பெறுவழி நினைவகம் (RAM) : **அழிதகு** தற்காலிக சேமிப்பு. தகவல் வெளியிடல், தேக்கி வைத்தல். , மீண்டும் பெறல். 1-24GB
2. வாசிப்புமட்டும் நினைவகம் (ROM) : **அழிதகா** அடிப்படை உள்ளீட்டு வெளியீடு தொகுதி – BIOS
3. பதுக்கு நினைவகம் (Cache Memory) : CPU Memory





**ii. துணை நினைவகங்கள் /துணைத்தேக்கம்**

- துணைத்தேக்கம் Secondary Storage
  - காந்த ஊடகச்சாதனம்
    - வன்வட்டு Hard Disk
    - நெகிழ் வட்டு Floppy Disk
    - காந்த நாடா Magnetic Tape
  - ஒளியியல் ஊடகச் சாதனம்
    - இறுவட்டு CD
    - இலக்கமுறை மீநுட்பவட்டு DVD
    - பளுஹே Blu-ray
  - திண்மநிலைச் சாதனங்கள்
    - பளிச்சீட்டு செலுத்தி USB Flash
    - நினைவக அட்டை Memory Card

### ❖ வன்வட்டு Hard Disk

- நினைவகத்தட்டு Platter : தரவுகளை தேக்கிவைத்தல்
- சுழல் தண்டு, ● தலை ● தாண்டிப்புயம் ● வலுத்தொடுப்பான் ● தாண்டி

### ❖ ஒளியியல் ஊடகங்கள்

- **CD-ROM** :தரவு தகவல்களை வாசிப்பதற்கு மாத்திரம்
- **CD-R/DVD-R**: ஒரு தடவை மாத்திரம் தரவு தகவல்களை எழுதி பின் வாசிப்பதற்கு மாத்திரம்.
- **CD/DVD-RW** :தரவு தகவல்களை வாசிப்பதற்கு மாத்திரம்
- **Blu-ray(BD)R** : நீல லேசர் கதிர். அதிக கொள்திறன.
- **Blu-ray RE :**முழு கொள்திறன் நிரம்பும்வரை 1000 தடவை
- **Blu-ray 3D : 3D** வீடியோ பதிவு செய்யும்

LIVEWORKSHEETS

❖ **தரவுத் தொடர்பாடல்**




- தரவு மூலம் - தரவு அனுப்புநர்
- ஊடுகடத்தல் **ஊடகம்**
- தரவு வாங்கி – தரவு பெறுநர்

❖ **தரவுத் தொடர்பாடல் முறைகள்**

- **ஒற்றை முறை** : TV , Radio பத்திரிகை



- **அரை இருவழி** : walkie Talkie இணையத்தில் தேடி பெறுதல். (ஒரு தடவை ஒரு திசையில்)



- **முழு இருவழி** : தொலைபேசி (ஒரே தடவையில் இரு திசையிலும்)



❖ **தரவுத் தொடர்பாடல் ஊடகம்**



உரு 2.62 தரவு ஊடுகடத்தல் ஊடகம்








❖ **வழிப்படுத்திய ஊடகம் - 3 வகை**

1. **முறுக்கிய கம்பிச்சோடி – 2 வகை**
   i. பரிசையிடாத முறுக்கிய சோடி – (UTP)
   ii. பரிசையிட்ட முறுக்கிய சோடி – (STP)
2. **ஓரச்சு வடம்** : செப்பு கம்பிவலை புறவடம் மையவடத்தை சுற்றி மின்காந்தவியல்பை உருவாக்கும். Eg: TV Cabele, CCTV Cable
3. **நார் ஒளியியல் (Fiber Obtic)** : கண்ணாடி கோல், கண்ணாடி நார்களால் ஆனது. ஒளி தெறிப்படைந்து ஊடுகடத்தப்படுகிறது. **விலை கூடியது. வேகம் கூடியது.**

❖ **வழிப்படுத்தாத ஊடகம்** - பௌதிக பொருள்கள் பயன்படுத்தாமல் சைகைகளாக தரவு கடத்தல்.

1. **வானொலி அலைகள்** : Wi-fi, Bluetooth
2. **நுண்ணலைகள்** : செய்மதி ஊடுகடத்தல், இணையம்
3. **செங்கீழ்க்கதிர்கள்** : TV Remote, Wireless Keyboard

❖ **கணனி வலையமைப்பைத்தொடுக்கும் சாதனங்கள்**



**i. வலையமைப்பு இடைமுக அட்டை (NIC)** : கணனி Network Port➔RJ45 தொடுப்பி மூலம் இணைக்கப்படும்.

**ii. ஆளி (Switch)/குவியம் (HUB)** : இரண்டு அல்லது மேற்பட்ட கணனிகளை இணைக்கப் பயன்படும்.

| ஆளி | குவியம் |
|---|---|
| கதி அதிகம் | கதி குறைவு |
| உரிய கணனிக்கு மாத்திரம் தகவல் பரிமாற்றம் | வலையமைப்பிலுள்ள எல்லா கணனிகளுக்கும் பரிமாற்றம் |
| முழு இருவழிப்போக்கு | அரை இருவழிப்போக்கு |

**iii. Wi-fi** : வானொலி அலை மூலமான தொடுப்பு

**iv. வழிப்படுத்தி (Router)** : இரண்டு அல்லது பல **வலையமைப்புக்களிற்கிடையில்** தொடர்பை ஏற்படுத்தல். **வலையமைப்பு நுழைவாயில்** எனப்படுகிறது.

**v. மொடம் (Modem)** :கணனியை இணையத்ததுடன் இணைக்க.. தரவுப்பெயர்ப்பாளர், இலக்கமுறைத்தரவுகளை ஒத்திசைவு தரவுகளாக மாற்றி கடத்தல். **MO**dulator, **DEM**odulator. **அகநிலை, புறநிலை, கம்பியில்லா** மொடம் என 3 வகை.

**vi. தீச்சுவர் (Firewall)** : இணையத்திற்கும் கணனி வலை அமைப்பிற்குமிடையில் பாதுகாப்பு தடுப்பாக இருக்கும். இது வன்பொருள், மென்பொருளாகவும் காணப்படுகிறது.







❖ **சேவைப்பயனர்/சேவையக வலையமைப்பு**



சேவைப்பயனர் : தகவல்களை கோருபவர்
சேவையகம் : தகவல்களை வழங்குபவர்

❖ **கணினி வலையமைப்பு முறைகள்**








- **LAN : இடத்துரி** சிறிய அறை/ கட்டடத்தினுள் இணைப்பு **பாடசாலை, அலுவலகம்.**
- **MAN : பெருநகர்ப்பரப்பு** 10 மைல் அல்லது குறைந்த பிரதேச இணைப்பு.(நகரங்களிற்கிடையில்) **வங்கி, கிளையுள்ள நிறுவனங்கள்**
- **WAN பெரும் பரப்பு** : மிகவும் அகன்ற ஒரு பிரதேசத்தை உள்ளடக்குமாறு அமைக்கப்படும் வலையமைப்பு. நாட்டிற்கு வெளியேயும் தொடர்புபடுத்தல். **இணையம்.**

**LAN:** சிறிய கட்டடத்தினுள் **MAN:** நகரங்களுக்கிடையில் **WAN:** நாடுகளுக்கிடையில்

❖ **கணினி வலையமைப்பு இடவியல் (Topology)**

ஒரு வலையமைப்பில் இடத்திற்கேற்ப திட்டமிட்ட வடிவம்

**i. உடு வடிவம் (STAR Topology)**


உரு 2.86 உடு வடிவத்திற்கு வலையமைப்பாக்கல்

- பெரும்பாலான பொதுவான வடிவமைப்பு வடிவம்
- குவியம் அல்லது ஆளியை மையமாகக்கொண்டது.

**ii. பாட்டை வடிவம் (Bus Topology)**


உரு 2.87 பாட்டை வடிவத்திற்கு வலையமைப்பாக்கல்

- பிரதான வடத்தினூடு தொடுப்பு
- ஒழுங்கின்மை ஏற்றபட்டால் முழு வலையமைப்பும் பாதிப்படையும்.
- முதுகெழும்பின் இரு அந்தங்களிலும் முடிப்பான்கள் (Terminator) காணப்படும்.
- வலையமைப்பு எளிது. குறைந்தளவு வடம்

**iii. வளைய வடிவம் (Ring Topology)**



- கணினிகள் வளையமாக ஒன்றோடொன்று இணைத்தல்.
- ஒழுங்கின்மை ஏற்பட்டால் முழு வலையமைப்பும் பாதிப்பு.

**iv. மர வடிவம் (Tree Topology)**



- உடு வடிவ வலையமைப்புக்கள் சிலவற்றை பாட்டை வடிவத்தில் வலையமைப்பாக்குதல்.
- வலையமைப்புக்களை தனித்தனியே கட்டுப்படுத்தலாம்.

**v. கண்ணி வடிவம் (Mesh Topology)**


உரு 2.90 கண்ணி வடிவத்திற்கு வலையமைப்பாக்கல்

- வலையமைப்பிலுள்ள எல்லா கணினிகளும் ஒன்றோடொன்று தொடுக்கப்படும்.
- சிக்கலான தொடுப்பு, கட்டுப்பாடு கடினம்.
- செலவு கூடியது.
- இணையத்தில் பல்வேறு வலையமைப்புளை இணைக்க இவ்வடிவம் பயன்படுகிறது.

❖ **வலையமைப்பாக்கத்தின் அனுகூலங்கள், பிரதி கூலங்கள்**

| நன்மைகள் | தீமைகள் |
|---|---|
| தரவு, தகவல் பரிமாற்றம் | நச்சுநிரல் |
| தரவுகளைத் தேக்கி வைத்தல் | வலையமைப்பு தகர்வுறல் |
| வளத்தை பொதுவாகப் பயன்படுத்தல். Printer, Scanner | குறைந்த பாதுகாப்பு, அனுமதி இன்றிய நுழைவு |
| ஒருமுகப்படுத்திய மென் பொருள்களை கட்டுப்படுத்தல் | கணினி தவறுகள் |
| யாதாயினும் ஓர் இடத்ததில் எந்த நேரத்திலும் இணைப்பதற்கான ஆற்றல் | பயிற்சித் தேவைகள் |
| பாதுகாப்பு | குறைந்த பாதுகாப்பு |

LIVEWORKSHEETS